மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே (அ) இல்லை.

(ஆ) ரூ. 452.11 லட்ச செலவில் முதலில் திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. மத்திய அரசின் யோசனைப்படி திட்டத்தின் செலவினைக் குறைத்து ரூ. 300.16 லட்சத்திற்கான திருத்தப்பட்ட திட்டம் மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. நிதி பற்றாக் குறையின் நிமித்தம் இந்தத் திட்டத்தை ஏற்பதற்கில்லையென மத்திய அரசு தெரிவித்தது. இத்திட்டத்தினால் விவசாயிகளுக்கு ஏற்படும் பல்வேறு நன்மைகளைக் கருத்திற்கொண்டு மீண்டும் பரிசீலனை செய்து இத்திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்க வேண்டுமென மத்திய அரசினை வற்புறுத்தியிருக்கிறோம்.

நகராட்சிகளை மாநகராட்சிகளாக்கல்.

குறுகியகால வினா எண். 1 திரு. மீ. வின்சென்ட் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நகராட்சிகளை மாநகராட்சி ஆக்கும் எண்ணம் இந்த ஆண்டில் ஏதாவது உள்ளதா ?

(ஆ) நாகர்கோவில் நகராட்சி மாநகராட்சியாக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் நகராட்சியை மாநகராட்சி ஆக்குவதற்கு ஏற்கெனவே அரசு முடிவு எடுத்துள்ளது. குடியரசு தலைவருடைய முன் ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. இதைப்பற்றிய சட்ட வடிவம் பட்ஜெட் தொடரில் கொண்டு வர இருக்கிறது. மற்ற நகராட்சிகளை மாநகராட்சி ஆக்க செயல்குறிப்புகள் ஏதும் இப்பொழுது அரசிடம் இல்லை.

[முற்பகல் 10-10]

திரு. மீ. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நகராட்சி, மாநகராட்சியாக என்ன அடிப்படையில் ஆக்கப்படுகின்றது. 95 லட்சம் ரூபாய் ஆண்டு வருமானம் உள்ள நாகர் கோவில் நகராட்சியை மாநகராட்சியாக்க ஏதாவது தடங்கள் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மற்ற நகராட்சிகளை மாநகராட்சியாக ஆக்குவதற்கோ, எல்லா நகரியங்களையும் நகராட்சிகளாக ஆக்குவதற்கோ, எந்தவிதமான கூடுதலோ அல்லது கழித்தலோ கூடாது என்றும், மக்கள்தொகை கணக்கெடுப்பு முடியும் வரையில் செய்யக்கூடாது என்று மத்திய அரசு ஆணைபிறப்பித்திருக்கிறது. எனவே 30-6-1981க்குப் பிறகுதான் அதைப்பற்றி எல்லாம் செய்யும்நிலையில் இருக்கிறோம் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை அதற்கு பின்னால் பரிசீலிக்கலாம்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, கோவை நகராட்சி, மாநகராட்சியாகப் போகிறது என்று பலதரம் இந்த சட்ட மன்றத்திலே அமைச்சர் தெரிவித்திருக்கிறார். பொங்கல் விழாவின் போதே அது பிரகடனப்படுத்தப்படும் என்று சொன்னார்கள். என்றிலிருந்து கோவை மாநகராட்சியாகச் செயல்பட ஆரம்பிக்கும். அந்த மாநகராட்சிக்கும், இந்தநகராட்சிகளுக்கும் நடக்கும் தேர்தலோடு சேர்த்து நடத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே 'Coimbatore Municipal Corporation Act என்று ஒரு சட்டத்தை பட்ஜட் தொடர் கூட்டத்திலேயே அறிவித்து, அது இந்த மன்றத்தின் அனுமதி பெற்றபின்னால்தான், அதற்கான தேதிகள் எல்லாம் குறிப்பிடப்படும். தேர்தல் பற்றி எல்லாம் அதற்குப் பின்னால் தெரிவிக்கப்படும்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, கோவை நகராட்சி, மாநகராட்சியானதற்கு பின்னர், சென்னை மாநகராட்சியில் இருப்பது போன்று, அரிசனங்கள்' மலைவாழ் மக்களுக்கு உரிய இடங்களை சட்டரீதியாக ஒதுக்கித் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அது பற்றித் தனிக் கேள்வி போட்டால் விவரமாக பதில் சொல்லப் படும்.

Thiru K.S.G. HAJA SHAREEF ; On a point of information May I know from the Hon. Minister whether there is any directoin from the Central Government that elections for the Panchayats and other Municipalities should not be conducted, since he has been telling this?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் இந்த மன்றத்திலே அறிவித்திருக்கிறேன். மைய அரசு வருகின்ற 31—3—1981 வரையிலும், எந்தவிதமான உள்ளாட்சித் தேர்தலையும் நடத்தக் கூடாது என்று கேட்டுக் கொண்டிருக்கிறது என்பது ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சியாகப் போவது போல, வேறு எந்தெந்த பெருநகரங்கள் மாநகராட்சியாக்கப்பட இருக்கின்றன என்பதை அறிய இயலுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இதுவரையிலும் அரசின் குறிப்பிலே இருப்பதெல்லாம் கோவை நகராட்சியை மாநகராட்சியாக்குவதற்கான நிலைமைகள் பரிசிலிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டது. குடியரசுத் தலைவருடைய ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. அதேபோல இன்று தேர்தலை நடத்துவதைப் பற்றிக் கூட மாண்புமிகு உறுப்பினர் ஹாஜாஷெரிப் அவர்கள் கேட்டார்கள். வருகின்ற 31—3—81

வரையிலும் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடக்கின்ற காரணத்தினால் உள்ளாட்சித் துறைத் தேர்தல்களை ஒத்திவைக்கவேண்டும் என்று மைய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

திரு மீ. வின்சென்ட் : தலைவர் அவர்களே, நிதிநிலை முழு அளவில் இருக்கிற காரணத்தினாலே, 30—6—81க்கு பிறகாவது நாகர்கோவில் நகராட்சியை மாநகராட்சியாக ஆக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அது பரிசீலிக்கப்படும்.

திரு. கு. ப. பழனியப்பன் : தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் கிளாரிபிகேஷன் எல்லாம் கிடையாது.

கன்னியாகுமரி நகரியம

குறுகியகால வினா எண். 2— திரு. சு. முத்துகிருஷ்ணன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி நகரியத்தை நகராட்சியாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) இதனால் வருமானம் எவ்வளவு அதிகரிக்கும் ?

(இ) கன்னியாகுமரியில் சோடியம் விளக்குகள் பொருத்தி அழகுபடுத்த வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ), (ஆ) மற்றும் (இ) : இதுபற்றிய செயற்குறிப்புகள் ஏதும் அரசிடம் இப்போது இல்லை. அப்படி நகராட்சியாக மாற்ற வேண்டுமானாலும் அதை 30—6—81க்குப் பின்தான் பரிசீலிக்க முடியும்.

திரு. சு. முத்துகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, கன்னியாகுமரி நகரியத்தை நகராட்சியாக மாற்றுவது குறித்து 30—6—81க்கு பின்னர்தான் பரிசீலிக்க முடியும் என்று சொன்னார்கள். கன்னியாகுமரி இந்தியாவிலேயே ஒரு முக்கியமான சுற்றுலாப் பிரதேசம். கூடுதலான வருமானத்தை ஈட்டுகின்ற இடம். ஆகவே, அரசு அதில் தனிக்கவனம் செலுத்தி, கன்னியாகுமரி நகரியத்தை இந்த ஆண்டிலேயே நகராட்சியாக உயர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

அது மட்டுமல்ல, என்னுடைய மூலக்கேள்வியிலேயே கன்னியாகுமரியில் சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தி அழகுபடுத்த வழிவகை செய்யப்படுமா என்று கேட்டு இருந்தேன். அதற்கு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS